DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.15**

| | | | |
|---|---|---|---|
| Name | : களஞ்சியராணி | Calling | மருத்துவர் |
| Father's Name | : | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 03-03-2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு அரசு மருத்துவமனையில் குடிமையியல் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.05.2017 அன்று ஈரோடு அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருந்தபோது இரவு 9.15 மணிக்கு தங்கராஜ் 34 வயதுள்ள ஆண் ஒருவரை அவருடைய சகோதரர் சுப்பிரமணி என்பவர் இறந்த நிலையில் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரது இறப்பு தகவலை ஈரோடு புற காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி **இறப்பு தகவலின் உண்மை நகல் அ.சா.ஆ.12** ( எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன்). பின்னிட்டு அவரது உடலை பிணவறைக்கு அனுப்பி வைத்தேன். இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேற்படி இறப்பு தகவலின் அசலை காவல்துறையினர் பெற்றுக் கொண்டார்களா என்றால் பெற்றுக் கொண்டார்கள். மேற்படி அசல் இரண்டு நகல்களாக தயார் செய்யப்பட்டது. நான் தற்போதும் ஈரோடு அரசு மருத்துவமனையில் தான் பணிபுரிகிறேன். மேற்படி ஆவணத்தின் அசல் தற்போதும் ஈரோடு அரசு மருத்துவமனையில் இருக்கலாம் என்றால் அதை சரி

பார்க்க வேண்டும். மருத்துவமனையில் உள்ள அசல் ஆவணத்தை பார்வையிட்டு நான் மேற்படி உண்மை நகலில் கையெழுத்து செய்தேன். மேற்படி ஆவணத்தில் அசல் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு அதன் உண்மை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உண்மை நகலை இந்த வழக்குக்காக காவல்துறையுடன் சேர்ந்து கொண்டு தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அசல் ஆவணம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தேதியில் இறந்து போன சுப்ரமணியன் பிரேதம் காங்கேயம் அரசு மருத்துவமனையில் இருந்து கொண்டுவரப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி பிரேதத்தை மருத்துவமனைக்குள் எடுத்து வந்து பரிசோதனை செய்த பிறகு அவர் இறந்துவிட்டதாக உறுதி செய்தேன். இறந்த நிலையில் ஒருவர் உடல் கொண்டுவரப்பட்டால் அதில் உள்ள காயங்களை நாங்கள் ஆவணத்தில் குறிப்பிடமாட்டோம். அந்த சூழ்நிலையில் அவர் எவ்வளவு நேரத்திற்கு முன்பு இருந்திருக்கலாம் என்று என்னால் கூற முடியாது என்றால் சரிதான். இறந்துபோன நபரை எந்த வாகனத்தில் கொண்டு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காங்கயத்திலிருந்து திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தான் அருகில் உள்ளது என்றால் சரிதான். அவரை விரைவாக மருத்துவமனைக்கு கொண்டு சென்று இருந்தால் காப்பாற்றி இருக்கலாம் என்று நான் கருதுகிறேன் என்றால் அது குறித்து என்னால் கருத்து சொல்ல முடியாது. காங்கயம் அரசு மருத்துவமனையில் கொடுத்த விபத்து பதிவேட்டு அறிக்கையின் நகலை பார்வையிட்டேன். மேற்படி விபத்து பதிவேட்டு அறிக்கையில் இறந்து போன நபர் எந்த மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தார் என்று எனக்கு தெரியவில்லை. அவர் திருப்பூர் அரசு மருத்துவமனைக்குத்தான் மேற்படி ஆவணத்தில் பரிந்துரை செய்யப்பட்டு இருந்தார் என்றாலும் மேற்படி தகவலை நான் மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. பொதுவாக அந்தந்த மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு நோயாளிகளை பரிந்துரைப்பது தான் வழக்கம் என்று சொன்னால் சரிதான். பிற மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைக்கு பரிந்துரைக்கும் வழக்கம் மருத்துவர் இடையே இல்லை என்று சொன்னால் நோயாளிகள் கேட்டுக் கொண்டால் அவ்வாறு பரிந்துரைக்கலாம். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் மேற்படி இறப்பு தகவல் ஆவணத்தை தயார் செய்யவில்லை என்றாலும் காவல்துறையினர் கேட்டுக் கொண்டதற்கு தவறான ஒரு ஆவணத்தை தயார் செய்து அதை பொறுத்து சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.03 20:27:43 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.16**

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணன் | Calling | |
| Father's Name | : திருமூர்த்தி | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 03-03-2026

**முதல் விசாரணை**

நான் தாராபுரத்தில் குடியிருக்கிறேன் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி ராக்கி எனக்கு தெரியும் அவர் எனக்கு பங்காளி முறை வேண்டும். சாட்சி சிவன்மதியை எனக்கு தெரியாது. எதிரி கூட்டிக்கொண்டு வந்ததற்கு பிறகுதான் அவரை எனக்கு தெரியும் அதற்கு முன்பு எனக்கு தெரியாது. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு எதிரியையும் சிவன்மதியையும் காங்கேயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்தார்கள். நான் அங்கு சென்று இருந்தேன். அங்கு நாங்கள் அனைவரும் பேசினோம் அதன் பிறகு சிவன்மதி அவரது கணவருடன் சென்று விடுவதாகவும் எதிரி அவரது பெற்றோருடன் சென்று விடுவதாகவும் முடிவு செய்தார்கள். மகளிர் காவல் நிலையத்தில் எதிரியையும் சிவன்மதியையும் பிரித்து வைத்து விடலாம் என்று சொன்னார்கள். எழுதிகொடுத்துவிட்டு இருவரையும் போகச் சொல்லி சொன்னார்கள். அவ்வாறு சிவன்மதி எழுதி கொடுத்ததில் நான் கையெழுத்து செய்தேன். மேற்படி **கடிதத்தின் உண்மை நகல் அ.சா.ஆ.13**. பின்னிட்டு மேற்படி நிகழ்வு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சிவன்மதி தான் எதிரியை கூட்டிச் சென்றதாக அவருடைய அப்பா என்னிடம் சொன்னார். எதிரி மேற்படி சிவமதியை விட வயதில் குறைந்தவர் என்றால் சரிதான். புகார் கொடுத்ததில் இருந்து எவ்வளவு நாட்கள் கழித்து சிவமதியை கூட்டி வந்தார்கள் என்று எனக்கு நினைவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் எதிரி தான் தாங்கள் சேலத்தில் இருப்பதாகவும் வந்து கூட்டிச்செல்லுமாறும் சொன்னார் என்று சொன்னால் சொல்லியிருக்கலாம். எதிரி, சிவன்மதியின் அப்பாவிடம் தன்னை சிவன்மதி தான் கூட்டி வந்ததாகவும் தன்னை வந்து அழைத்துச் செல்லுமாறும் சொன்னார் என்றால் சொல்லி இருக்கலாம்.

2. காவல் நிலையத்தில் சிவன்மதியை அவருடைய அப்பாவுடனும் கணவருடனும் போகச் சொல்லி சொன்னபோது அவர் போக மறுத்ததால் அவரை அமைதி இல்லம் என்கிற இல்லத்தில் திருப்பூரில் தங்க வைத்திருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி அமைதி இல்லத்திலிருந்து அவரை கூட்டி வந்து மறுபடியும் அவரது கணவர் மற்றும் பெற்றோருடன் அனுப்பி வைத்து விட்டார்கள் என்றால் சரிதான். சிவன்மதி தன்னுடைய கணவருடன் செல்ல மறுத்தபோது அவரை கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். அப்போது எதிரி திருமணம் செய்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். தற்போது எதிரிக்கு திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரி பொறியியல் படிப்பு படித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். சிவன்மதி 12-ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் சரிதான்.

3. அதன்பிறகும் மேற்படி சிவன்மதி தன்னுடைய பெற்றோர் கணவர் கூறியதை கேட்காமல் மீண்டும் எதிரியுடன் செல்போனில் தொடர்பு கொண்டு பேசி வந்தார் என்றால் சரிதான். சிவன்மதி மீண்டும் எதிரியிடம் பேசி வந்ததால் அவரை அடக்க முடியாமல் சிவன்மதியின் தகப்பனார் இறந்து போன தங்கராஜ், உதயகுமார், சிவன்மதியின் தம்பி ஆகியோர் எதிரியை அவருடன் பேசக்கூடாது என்று மிரட்டி வந்தார்கள் என்றால் சரிதான். எதிரி மேற்படி சிவன்மதியின்

உறவினர்களின் அச்சுறுத்தல்களுக்கு பயந்து வெளியிடத்தில் தங்கி இருந்தார் என்றால் சரிதான். அவர்களது பேச்சுவார்த்தை நிற்காததால் எதிரியை சிவன்மதியின் உறவினர்கள் அடித்து கொலை செய்ய தேடி வந்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பிறகு நடந்தது எனக்கு தெரியவில்லை.போலீசார் என்னை விசாரித்த போது தற்போது நான் கூறிய விவரங்களைத் தான் சொன்னேன். அதற்குப் பின்னிட்டு நடந்த சம்பவங்களை எதிரியின் அப்பா சொல்லித் தான் எனக்கு தெரியும். எதிரியை மேற்படி சிவன்மதியின் குடும்பத்தினர் கொலை செய்ய போன போது கைகலப்பு ஆகிவிட்டதாக எதிரியின் அப்பா என்னிடம் சொன்னார் யார் இறந்து போனார் என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.03 20:27:50 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.17**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ஜெயகுமாரி | Calling | **உதவி ஆய்வாளர்** |
| Father's Name | : | | Taluk | |
| Age | : | | District | |
| Village | : | | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 03-03-2026

முதல் விசாரணை

நான் திருப்பூர் மாவட்டத்தில் பொருளாதார குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்று வருகிறேன். கடந்த 13.04.2017 ஆம் தேதி காங்கேயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நிலையை அலுவலகத்தில் இருந்தபோது சொரியன் கிணத்துபாளையத்தை சேர்ந்த உதயகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி தன்னுடைய மனைவி சிவன்மதி என்பவர் ராக்கி என்பவர் உடன் தவறான உறவு ஏற்படுத்தி தன்னுடைய மகள் யாத்திராவையும் அழைத்துக் கொண்டு ஊரை விட்டு சென்று விட்டதாகவும் அவர்களை அழைத்து விசாரிக்கும் படியும் புகார் ஒன்றை கொடுத்ததார். மேற்படி புகாரை பெற்று நிலையை மனு ரசீது எண் 126/2017 கொடுத்தேன். மேற்படி மனுவை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் தேவி என்பவரின் பார்வைக்கு வைத்தேன் நான் வழங்கிய **மனு ரசீது உண்மை நகல் அ.சா.ஆ.14.** இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மேற்படி புகார் மனு கொடுக்கப்பட்ட போது சிவன்மதிக்கு 27 வயதாகும். மேற்படி மனுவில் எதிரியின் வயது என்ன என்று குறிப்பிடப்படவில்லை. அவர்கள் எழுதிக் கொடுத்த மனுவின் படி எதிரியின் வயது 24 ஆகும். எதிரி

மேற்படி சிவன்மதியை விட மூன்று வயது மூத்தவர் என்பதை நான் என்னுடைய விசாரணையில் தெரிந்து கொண்டேன். மேற்படி சிவன்மதிதான் தான் எதிரியை அழைத்துச் சென்றுள்ளார் என்றாலும் மேற்படி சங்கதியை மறைத்து நான் புகார் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் எதிரி தான் என்றாலும் நான் சிவன்மதியின் கணவரிடம் புகார் பெற்றதே தவறு என்று சொன்னால் சரியல்ல. எதிரி தான் பாதிக்கப்பட்ட நபர் என்பதால் நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்தால் மேற்படி சிவன்மதி மீது தான் எடுத்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் ஒருதலைப் பட்சமாக செயல்பட்டு வயது குறைவான எதிரி மீது மேற்படி மனுவில் நடவடிக்கை எடுத்திருப்பது தவறானது என்று சொன்னால் சரியல்ல. நான் பாதிக்கப்பட்டவருக்கு எதிராக மனுவை பெற்று ரசீது வழங்கியிருப்பதால் அது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.03 20:27:56 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 145/2021 Deposition of Witness for : P.W.18**

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணகுமார் | Calling | மருத்துவர் |
| Father's Name | : | Taluk | |
| Age | : | District | |
| Village | : | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 03-03-2026

முதல் விசாரணை

1. நான் தற்போது ஈரோடு அபி மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 12.05.2017 அன்று ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் பிண ஆராய்வு பணியில் இருந்த போது தலைமை காவலர் P. சரவணன் என்பவர் மூலமாக சுமார் 34 வயது மதிக்கத்தக்க தங்கராஜ் என்பவரது சடலம் பரிசோதனைக்காக எங்கள் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது. அவரது சடலத்தை நான் சடல கூறாய்வுக்கு எடுத்துக் கொண்டேன் அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு இடது இடுப்பு பகுதியில் ஒரு மச்சம் மற்றும் இடது முட்டியில் ஒரு காயத் தழும்பு ஆகியவை அங்க அடையாளமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. 12.05.2017 அன்று 12.10 மணிக்கு சடலக்கூறாய்வை துவக்கினேன். பிணவறையில் அவர் சடலம் மல்லாந்து நிலையில் படுக்க வைக்கப்பட்டிருந்தது அவரது கண்கள் மற்றும் வாய்ப்பகுதி மூடிய நிலையில் இருந்தது. அவரது உடலை பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன

1. 4x0.5x0.5 செ.மீ அளவுள்ள கிழிந்த காயம் ஒன்று அவரது இடது முழங்கையின் பின்புறம் காணப்பட்டது

2. 2x0.5 செ.மீ அளவுள்ள குத்து காயம் ஒன்று அவரது வயிற்றின் உள்பகுதியுடன் தொடர்ந்து காணப்பட்டது.
3. சுமார் 2x0.5 சென்டிமீட்டர் அளவுள்ள வெட்டுக்காயம் குத்து காயம் இடது அக்குள் பகுதியில் காணப்பட்டது அது நெஞ்சின் கூட்டு பகுதியில் ஆழமாக காணப்பட்டது
4. 2x.5x10 சென்டிமீட்டர் அளவுள்ள குத்து காயம் அவரது இடது தொடை பகுதியில் காணப்பட்டது.
5. அவரது வயிறை பரிசோதனை செய்து பார்த்தபோது சுமார் ஒன்றரை லிட்டர் அளவுள்ள குறைந்த ரத்தம் வயிற்றின் உட்பகுதியில் காணப்பட்டது. அவரது ஈரல் பகுதி முன்புறம் கிழிந்த நிலையில் காணப்பட்டது.
6. மேலும் அவரது சிறுகுடல், வயிற்று படலம் மற்றும் மலக்குடல் ஆகியவை பல்வேறு இடங்களில் கிழிந்த நிலையில் காணப்பட்டது. மேலும் அவரது மண்ணீரல் இரண்டு சிறுநீரகம் ஆகியவை இயல்பான நிலையில் இருந்தன. அவரது இரைப்பைப் பகுதியில் பகுதி அளவு செரிக்கப்பட்ட உணவு இருந்தது. அவரது ஆணுறுப்பு இயல்பான நிலையில் இருந்தது.
7. அவரது நுரையீரல் இடதுபுறம் கிழிந்த நிலையில் இருந்தது. மேலும் நுரையீரலில் இடதுபுற அறையில் ரத்தம் காணப்பட்டது அவரது இதயம் வலது நுரையீரல் மற்றும் நெஞ்சுக்கூடு ஆகியவை இயல்பான நிலையில் இருந்தது. அவரது மண்டை ஓடு தண்டுவடம் மூளை ஆகியவை இயல்பான நிலையில் இருந்தது.

3. பரிசோதனை முடிவில் இறந்தவர் மேலே சொல்லப்பட்ட காயங்களால் ஏற்பட்ட ரத்த இழப்பினால் இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்தேன் மேற்படி **சடலக்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.15. இறுதி அறிக்கை (Final Report) அ.சா.ஆ.16.** என்னிடம் காட்டப்படும் சா.பொ.2 கத்தியால் குத்தப்படும் போது இறந்து போன நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது. இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ஆய்வாளர் என்னை மேற்படி வழக்கு தொடர்பாக என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார் என்று குறிப்பாக சொல்ல முடியாது. சடலக்கூறாய்வு செய்து எத்தனை நாட்களுக்கு பிறகு ஆய்வாளர் விசாரித்தார் என்று குறிப்பாக சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னிடம் ஆயுதங்களை காட்டி மேற்படி ஆயுதங்களால் நான் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்படுமா என்று குறிப்பாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஈரோடு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள விபத்து பதிவேட்டு அறிக்கையை நான் பார்வையிடவில்லை. ஆய்வாளர் சடலக் கூறாய்வுக்கு முன்பு வழக்கின் வரலாறு குறித்து எனக்கு எழுத்து மூலமாக கொடுப்பார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கின் வரலாற்றின் அடிப்படையில் நான் சடலக்கூறாய்வு செய்வேன் என்று சொன்னால் சரியல்ல.

2. இறந்து போன நபர் வாகனத்தில் செல்லும்போது கம்பி போன்ற ஆயுதங்கள் மீது மோதி இருந்தால் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் ஏற்பட்டிருக்க கூடும் என்று சொன்னால் அதற்கு வாய்ப்பில்லை. கம்பி ஏற்றிச் செல்லும் லாரியின் பின்புறம் மோதி இருந்தால் அவருக்கு மேற்கண்ட காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்று சொன்னால் அவருக்கு ஒரு காயம் வலது வயிற்றுப் பகுதியில் இன்னொரு காயம் இடது அக்குள் பகுதியிலும் ஏற்பட்டிருப்பதால் அதற்கு வாய்ப்பில்லை. கம்பி ஏற்றிச்செல்லும் வாகனத்தின் பின்புறம் மோதி இருந்தால் இறந்து போனவருக்கு ஏற்பட்டிருக்கும் காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றாலும் நான் தவறான கருத்தை கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்தபோனவருடைய இரத்தம் மாதிரியை சேகரித்து பரிசோதனைக்கு அனுப்பினேன்.

3. மேற்படி இரத்த மாதிரியின் ஒரு பகுதியை காவல் துறைக்கு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆயுதங்களில் பயன்படுத்துவதற்காக கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இரத்த மாதிரிகள் எந்த முறையில் பதப்படுத்தப்பட்டன என்பது குறித்து நான் எந்த விளக்கமும்

கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரத்த மாதிரி முறையான வகையில் நான் பதப்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்துறை கேட்டுக் கொண்டதற்கு இணங்க காவல்துறைக்கு ஆதரவாக ஒரு சடலக்கூறாய்வு அறிக்கை நான் வழங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.03 20:28:03 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.